# வித்து

மாதாந்த அறிவியல் மாணவர் சஞ்சிகை



இதழ் - 2

விலை : ரூபா 16/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வித்து

**இதழ் 3 ...................**

**................... தருபவை**

- ☞ புதிய கண்டுபிடிப்புகள் / சிந்தனைத் துளிகள்.
- ☞ பார்வை ........ சில துளிகள்.
- ☞ உண்மைக் கதை.
- ☞ நம்நாட்டின் கலாச்சாரம் அழிந்துவரும் பரிதாபம்.
- ☞ தகவற் களஞ்சியம் / பொருள் தரும் ஆங்கிலச் சொற்கள்.
- ☞ இனப்படுகொலைகள் மறக்க முடியாத சம்பவங்கள்.
- ☞ சின்னக்காத்தான் குளம் - வவுனியா. (உண்மைச் சம்பவம்)
- ☞ கவிதை வித்து மரம் நடுகை வாரம். (சூழல் சிறப்பம்சம்)
- ☞ வியக்க வைக்கும் விலங்கினங்கள்.
- ☞ இங்கிலீஸ் கோணர்.
- ☞ பொதுஅறிவுப் போட்டி / முயன்று பாருங்களேன்.
- ☞ மூட நம்பிக்கைகள் ஏனடா மனிதா?
- ☞ ஊசிமலைக் காடுகள்.
- ☞ மனம் மாறிய திருடன் (மழலை வித்து சிறுகதை)
- ☞ இன்னும் பல சுவையான அம்சங்களுடன்
- ☞ விஞ்ஞானம், கணிதம், புவியியல், விலங்கியல், தாவரவியல், கண்டுபிடிப்பு போட்டி, சொற்சிலம்பம் என்பன.


**வாங்கத் தவறாதீர்கள் ..............**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வித்து

**மாதாந்த அறிவியல் மாணவர் சஞ்சிகை**

அன்றும்




இன்றும்

வெகு விரைவில்

இதழ் - 3

விலை : ரூபா 16/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# "வித்து" Vitdu

விதை : 1
முளை : 2

*மாதாந்த அறிவியல்*

மாணவர் சஞ்சிகை

விலை ரூபா. 16/=

நிர்வாக ஆசிரியர் :

"வித்து"
966, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

**இயன்றவரை சமாதானமாக இருங்கள். எத்தகைய இடையூறுகள் வந்தாலும் உண்மையை மட்டும் கூறுங்கள்.**

**உண்மையின் பாதையிலே செல்லுங்கள்**

**சீர்திருத்தவாதி**
**- மார்ட்டின் லூதர் -**

- **தீயவை தீயினும் அஞ்சப்படும்.**
- **ஒழுக்கமே ஒருவனை மனிதனாக்கும்.**
- **மதுவும் மாதரும் தீமையின் அடிப்படை.**

**-அறிஞர் ஒருவர்-**

## புதிய கண்டுபிடிப்புகள்

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் திரு வாறில் என்பவர் நைஜீரிய மருத்துவர்களுடன் இணைந்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர் சிலரதுஉடலில் மலேரியாவின் பிறபொருள் எதிரி (Human lymphocite Antigen) இருப்பது அறியப்பட்டது.

இப் பிறபொருள் எதிரி ஒரு சிலருக்கு மட்டுமே செயற்திறன் கொண்டதாக காணப்படும். உதாரணமாக நைஜீரியாவின் மக்கட்தொகையில் 90% ஆனோர் இந்நோயினால் பாதிக்கப்பட்டனர் மீதி 10% ஆனோர் பாதிக்கப்பட வில்லை. இப் 10% இனரும் பிறபொருள் எதிரியின் செயற் திறன் கொண்டவர்கள் என்பது ஆய்வின் போது தெரியவந்தது இப்பதார்த்தம் குருதியில் உள்ள செங்குருதிச் சிறு துணிக்கைளின் உள்ளே செல்லும் மலேரியாக் கிருமிகளை வெளியே இழுத்து விடுகின்றது. பின்னர் வெண்குருதிச் சிறு துணிக்கைகள் இவற்றைக் கொன்று விடுகின்றன. இப்பதார்த்தத்தை செயற்கை முறையில் உருவாக்கி தடுப்பு மருந்தாக உபயோகிப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கனவு என்பது இடையறாது தொடர்ந்து நேரிடக்கூடிய ஒரு வினோதமான அனுபவம். இது தானக ஏற்படக் கூடடியது. அந்தரங்கமானது. குறிப்பிட்ட சில ருக்கு மீண்டும் மீண்டும் வரும் உதாரணமாக கீழே விழுதல் அசைக்க முடியாமல் உறைந்து போவது என்பனவாகும்.

கனவுகளில் உண்மை இருக கிறது என்று ஒரு சில மனவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

கனவுகள் தெய்வீகமானவை, வரும் பொருள் உரைப்பவை என்று சாக்கிரட்டீஸ் கூட நம்பி-யிருக்கிறார்.

நிறைவேறாத ஆசைகளும் உணர்ச்சிகளுமே கனவுகளில் பிரதிபலிக்கின்றன என்கிறார் சிக்மன் பிறைட்.

மூளை இயக்கத்தின் இயல் பான வெளிப்பாடே கனவுகள் என சரியாககூறியிருக்கின்றார். அரிஸ்ரோட்டில்

கனவு பற்றி ஒரு உண்மைச் சம்பவம் 1993ம் ஆண்டு பிச்சை என்பவருடைய கனவில் விநாயகர் தோன்றி அவரின் வீட்டில் புதையல் இருப்பதாகக் கூறினார். இதை நம்பிய பிச்சை தனது வீட்டில் சுரங்கம் வெட்டத் தொடங்கினார். சுரங்கம் அவரது வீட்டையும் தாண்டி அடுத்த விட்டிற்குள் சென்றும்புதையல் கிடைக்கவில்லை. அடுத்தவீட்டார் அவரை பொலீஸில் புகார் கொடுத்து சிறையில் தள்ளினார். இன்று பிச்சை கம்பி எண்ணு கின்றார். தேவையா?பயங்-கரமான கனவுகள் தோன்றக் காரணம்பலவிதமான ஆசைகளை அடக்கி வைப்பதே ஆகும். அதாவது பாலியல் (SEX) குற்ற உணர்ச்சியின் வேகம் போன்றவையாகும்.

கனவுகள் இரண்டு வகைப்படும்

1. இயற்கைக் கனவுகள்
2. செயற்கைக் கனவுகள்

மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு சிலருக்கு கனவு வராது. மருத்துவரீதியில் அவர்களுக்கு கனவுகள் செயற்கையாகத் தோற்றுவிக்கப்படுகின்றது. இது செயற்கைக்கனவுகள் எனப்படும். மேலும் கனவுகள் மூளையைப் புதுப்பிக்கும் தன்மையுடையன. ஒரு மனிதனுக்கு சில நிமிடம் கனவுடன் சஞ்சலிப்பது அவ சியமாகிறது.

அன்றாட இயந்திர வாழ்க்கை யில் இருந்து நம்மை ஒதுக்கிட சுகமான கனவுகள் உதவுகின் றன. கனவுகள் மூலம் தீராத சில பிரச்சினைகளுக்கு விடை கிடைத்து -விடுகின்றன.

உதாரணமாக ரஷ்ய நாட்டு விஞ்ஞானி ஒருவர் 1969ல் நூலகங்களின் அட்டவணையை கனவில் தான் கன்டுபிடித்தார் என்று கூறுவார்.

**நிலவன் (ஆசிரியர்)**

கனவுகள் இயற்கையாகத் தோன்றுகின்றன. இன்பத்தையும், துன்பத்தையும் மகிழ்ச்சிகளையும், எதிர்பார்ப்புக்களையும் வெளிப்-படுத்துகின்றன. எது எப்படி-யானாலும் பகற்கனவு காண்பது தவறு. இரவில் கனவு காண்பது தவறே கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நம் நாட்டின் பனை வளம்

# அழிந்து வரும் பரிதாபம்

நம் நாட்டிற்கென சிறப்பாக அமைந்த இயற்கை வளங் களுள் பனை வளமும் ஒன்றாகும். நம் மூதாதையர்கள் போற்றிப்பாது காத்து பேணிவந்தவளங்கள் இன்றைய போர்ச்சூழ் நிலை களாலும் ஏனைய காரணி களாளும் அழிந்துபோவதை எண்ணுகின்ற போது எம்மவர்கள் பலருடைய நெஞ்சங்களும் வெம்பிவிடுகிறது.

1995ம் ஆண்டிற்கு முன் இப்பனைமரங்களின் தயவினில் வாழ்ந்து வந்த குடும்பங்கள் இன்று நடுத்தெருவில் நிற்கும் நிலை உருவாகியுள்ளது.பனை வளத்தினையே நம்பி வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தகுடும் பங்கள் பல இன்று மீளக் குடியமர்ந்தும் தொழில் வாய்ப் பற்ற நிலையில் பட்டினியால் துடிக்கின்றன.

காரணம் போர்ச் சூழ்நிலை காரணமாக நம் தேசங்களை ஆக்கிரமித்துள்ள இராணுவப் படையினர் பதுங்குகுழிகளையும், காவல் அரண்களையும,வீதித்தடைகளையும் ஏற்படுத்திக் கொள்ள இப்பனைவளங்களை கண்மூடித்தன மாகத்தறித்து அழித்தலே ஆகும். அன்று எத்தனையோ பேருக்கு உணவூட்டிய இப்பனை மரங்கள் இன்று தம்மைக்காத்துக் கொள்ள மரண ஓலமிடுவது எம்மவர்கள் காதுகளில் விழுந்-தாலும் தட்டிக்கேட்க முடியாத நிலை அன்றிருந்தது. ஆனால் இன்று யுத்தநிறுத்தம் சமாதானம் என்று எல்லாம் கூறிக் கொண்டும் முன்பை விட மிக அதிகளவில் பனைகள் தறித்து அழிக்கப்படுகின்றன. இவற்றை நாவற்குழி, கைதடி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் அப்பட்டமாகக் காணக் கூடியதாக உள்ளது.

ஒரு பனை தறிப்பவனும் அற்கான அனுமதியுடனேயே தறிக்க வேண்டும் என்ற காலம் மாறி கண்ணில் கண்ட மரங்களையெல்லாம் தறிக்கும் காலம் இன்று காணப்படுகின்றது.

சூழல் பாதுகாப்பு சூழல் பாதுகாப்பு என்று தம்பட்டம் அடிப்பதில் பயனில்லை இவ் வாறான செயல்களைத் தடுப்பதே சூழலுக்கு நீங்களும் நாங்களும் செய்யக் கூடிய உபகாரமாகும்.

இன்று இதனைத் தடுக்கா விட்டால் நாளை தடுப்பதில் பயனில்லை. சூழலை உண்மை யிலேயே நேசிப்பவர்கள் இவ் வாறான செயல்களில் ஈடுபட மாட்டார்கள் என்பதை விட கண்டும் காணாமல் இருக்க மாட்டார்கள் என்பதே உண்மை.

இயற்கைப் பாதுகாப்பு, பனை அபிவிருத்திச் சபை, வன இலாகா இவ்வாறு பல அமைப்புக்கள் இருந்தும் என்ன பயன் என வருங்காலெ சமுதாயம் நம்மீது பழிசுமத்தக் கூடாதல்லவா?

---

**எழுதுவது - விழுது -**

---

எங்கள் பிள்ளைகளுக்-காகவும்,அவர்களின் வழித்-தோன்றல்கள் ஆகிய வருங்கால சமுதாயத்திற்-காகவும் இவற்றைச் செய்வது எமதுகட்டாய கடமையாகும்.

**சம்பந்தப்பட்டவர்கள் செவிமடுப்பார்களா?**

''இருப்பதோ சில மரம்
அழிந்தால்
எமக்கினி ஏது வளம்''

**S. சங்கீரன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தகவற் களஞ்சியம்

❖ உலகில் உள் விலங்கினங்களில் அதிக எண்ணிக்கையில் காணப்படுபவை பூச்சியினங்கள் ஆகும். இதுவரை 800.000 பூச்சியினங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

❖ உயிர் வாழும் நகருயிர்களில் மிகவும் பெரியது கடல் வாழ் முதலைகளாகும். இவற்றின் சராசரி நீளம் 14 அடியாகும்.

❖ அண்ணார்ந்து பார்த்த வாறே மழை நீரை அருந்தும் பழக்கம் வான் கோழி-களுக்கு உண்டு. சில சமயங்களில் அதனாலேயே மூச்சுத் திணறி இறந்தும் விடுகின்றன.

❖ எமது முள்ளந்தண்டில் 33 என்புகள் உள்ளன. ஆனால் இவற்றில் சில இணைவதால் 26 என்பு கள் இருப்பது போன்றே தென்படும்.

❖ பரப்பளவில் மிகச்சிறிய நாடு வந்திக்கான நகரம் (Vatican city)ஆகும் இதன் பரப்பளவு 44 ஹெக்ரெயர் ஆகும். இங்கு வாழும் மக்கட்தொகை சுமார் 1000பேர்.

# பொருள் தரும் ஆங்கில சொற்கள்

## ❖ NEWS என்றால்

N – North (வடக்கு)
E – East (கிழக்கு)
W – West (மேற்கு)
S – South (தெற்கு)

இந்த நான்கு திசைகளிலும் இருந்து வரும் தகவல்கள் அடங்கியது.

## ❖ WIFE என்றால்

W – Wonderful
I – Instrument
F – For
E – Enjoyment

அபூர்வமான கருவியை அனுபவி

## ❖ LOVE என்றால்

L – Look (பார்)
O – Observe (கவனி)
V – Verify (தீரவிசாரி)
E – Enjoy
(சந்தோஷமாய் இரு)

பார்த்து, கவனித்து, விசாரித்து, சந்தோஷமாய் இரு.

**யாழ் வினோத்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழர்களின் பாரம்பரியங்கள் அழிப்பும் யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிப்பும்

தென் கிழக்கு ஆசியாவில் மிகப் பெரிய நூலகமான யாழ்ப்பாணம் பொது நூலகம் 1981ம் ஆண்டு ஜுன் மாதம் 4ம் திகதி எரித்து தேமாக்கப்பட்டது அதன் பின்பு எத்தனையோ முயற்சிகள் எடுக்கப்பட்டும் இந்நூலகத்திற்கான புனரமைப்பு வேலைகள் செய்யத் தவறிவிட்டன. ஆனால் இன்று அதன் வேலைத் திட்டங்கள் அரைவாசி முடிவுற்ற நிலையில் சற்று தலைநிமிர்ந்து காட்சியளிக்கின்றது.

**வரலாறு**

வரலாற்றுப் பெருமை கொண்டதும் தமிழ்ப்பண்பாட்டின் கேந்திர நிலையமுமாகிய இந்நூலகம் மதத்தலைவர்கள் புத்தி ஜீவிகள் பெரியோர்களின் அயராத முயற்சியினால் உருவாக்கப்பட்டது.

தமிழ்ர்கள் படிப்புக்கும் கல்விக்கும் எப்போதும் முதலிடம் கொடுப்பவர்கள் யாழ்ப்பாண நூலகம் கல்வி ஆய்வுபோன்ற துறைகளில் உண்மையான கலாச்சார கேந்திரமாக விளங் கியது. 1959ம் ஆண்டில் இருந்து இயங்கி வரும் இந்நூல் நிலையம் துரிதமாக வளர்ச்சியடைந்து வந்தது. 1931ம் ஆண்டு சர்வஜன வாக்குரிமைகிடைத்தகாலத்தில் யாழ்ப்பாணத்தில் சுதந்திரமான நூலகமொன்று வேண்டு மென்ற எண்ணம் கருக்கொண்டது. சுதந்திரம் கிடைத்த ஓராண்டின் பின் அதாவது (1949) யாழ்ப்பா ணத்திற்கு மாநகர அந்தஸ்து கிடைத்தது.

யாழ்ப்பாணத்தின் முதலாவது மேயரான சாம். ஏ. சபாபதி அவர்கள் நூல் நிலையம் ஒன்றை நிறுவமாநகர சபையிடம் இருந்து அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டார். பிரபல இந்திய கட்டடக்கலைஞன் நரசிம்மன் திராவிட சிற்ப முறைப்படி இதற்கான மாதிரிப் படத்தை வரைந்தார் தமிழ் கலாச்சாரத்தின் கேந்திர நிலையமாக வந்த பிரபல்யமான நூல்நிலையத்தை

---

**செந்தமிழன்**

---

பொலிசாரும் இராணுவத்தினரும் குறிவைத்தனர்.

"இலங்கை சிங்கள பௌத்தருக்கே சொந்தம்"

"தமிழர் இலங்கைத் தீவின் அந்நியர்"

"தமிழர் சிங்கள-பௌந்த நாகரீகத்தின் முதன்மையான எதிரிகள்"

என சிங்கள-பௌத்த இன மதவாதிகளும், அரசியல்வாதிகளும்மேற்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேற்படி தவறான எண்ண வோட்டங்களையும் கருத்துக் களையும் சாதாரணமக்களின் நெஞ்சுகளில்விதைத்துள்ளன. இதன் வெளிபபாடு கட்டவிழத்து விடப்படும் இனப்படுகொலைகள், தமிழரின பாரம்பரியங்கள் சிதைத்து அழிக்கப் படுதலாகும்.

**உடனடிக் காரணம்**

தமிழரின் பாரம்பரியங்களை அழித்தலும் அடக்குமுறையும் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தாலும் யாழ் பொது நூலகம தீக்கிரையான உடனடிக்காரணம் வருமாறு:

1981 June 4ம் நாள் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது ஜெயவர்த்தனா அரசு யாழ் மாவட்டத்தில் வெற்றி பெறும் நோக்குடன் தனது அமைச்சர்களை எல்லாம்அனுப்பியதுடன் பாது - காப்பு என்ற பெயரில் ஆயுதப் படையினர் யாழ்பபாணத் துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஒரு பொலிஸார் பலியானதை தொடர்ந்து யாழ் மாநகரம முழுவதும் தீக்கிரை யாககப்படடது. இவற்றில்

1. பொதுநூலகம்
2. சந்தை
3. யாழ்நாடாளுமன்ற உறுப்பினா வீடு
4 தமிழாவிடுதலைக் கூட்டணி செயலகம்
5. கொழும்புக்கு வெளியே அச்சிடப்படும ஈழநாடு அச்சகம்


என்பன முக்கியமான தாகும். பொலிசார்நோடியாக யாழ்ப்பாண பொது நூலகத்துக்குச் செனறு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த புததகஙகளா மீது பெற்றோலை ஊத்தி நீவைத்து எரிக்கத் தொடங்கினர். நூலகம் எரிக்கப்படுவதை அறிந்த யாழ் மேயரின் செயலாளர் ஊழியர் களுக்கும் நெருப்பணைப்போருக்கும் நெருப்பை அணைக்கும்படி உத்தரவிட்டார். ஆனால் நெருப்பைஅணைக்க விடாது அவர்கள் பொலீசாரால் தடுக்கப்பட்டனர். இவ்வேளை பொலீஸ்மா அதிபர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள் என்பதும் யாழ் நூலகம் பொலீஸ் நிலையத்தில் இருந்து 300m தூரத்திலேயே அமைந்துள்ளதும் கவனத்தில் கொள்ள வேண்டியவை.

95,000 ற்கும் மேற்பட்ட அருமையான தொகுப்புக்-களும் கிடைக்க முடியாத அருமையான கையெழுத்துப் பிரதிகளும் எரிந்து சாம்பலாகின. வட இலங்கை யிலுள்ள திராவிட சிற்பக் கலையின் எடுத்துக்காட்டாக விளங்கிய அக்கட்டடத்தின் கருகிய சுவர்களை மட்டுமே தீ எச்சமாக விட்டது.

**அருஞ் சொத்து**

சைவத்தையும் தமிழையும் போற்றி வளர்த்த ஆறுமுக-நாவலர் காலத்து பல சுவடி நூல்களும யாழ் நூலகத்தில் இருந்து பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளை யாடறபுராணம் என்பவற்றை நாவலர் பெருமான் தமிழ்-நாட்டிறகுச் சென்று அங்கிருந்து பழைய சுவடிகளின் பிரதிகளை வைததிருநதார். சகல மொழி-களிலும் நூல்கள் இருந்தது சிறபபுக்குரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



யாழ் புனித சம்பத்திரிரியார் கல்லூரி அதிபராக இருந்த வண. பிதா. லோங் யாழ் நூலகத்தை ஆரம்பிப்பதில் பெரும் பங்காற்றினார் அத்துடன் தனது சேகரிப்புக்களையும் வழங்கினார்.

மேலும் வண. பிதா. தனிநாயகம், வண. பிதா டேவிற் மற்றும் கல்வி-யாளர்களும் பெரும் பங்காற்றியுள்ளனர்.

இன்னும் எத்தனையோ அடிகளார்களாலும் கல்வி-மான் களாலும் பல அரிய வளம் பெற்ற இந்நூல் நிலையத்தை திட்டமிட்ட சதிகாரக் கும்பலின் காட்டு மிராண்டித்தனமான கலாச்சாரக்கொலையாகும்.

எது எப்படியோ இன்று புணரமைப்பு செய்யப்படும். இந்நூல் நிலையம் இவ் ஆண்டின் கடைசியில் பூரணமடையும் ஆனாலும் அன்று காணப்பட்ட அதே கலாச்சார கலையுடனும் புனிதத்தன்மையும் காணப-படுமா? இந்நூல் நிலையத்திற்காக அரும்பாடுபட்ட அல்லது உயிர் நீத்த அடிகளார்களதும் கல்விமான் களதும் சுவடுகள் நிலைத்து நிற்குமா?

மாணவசமுதாயத்திற்கு 2003ம் ஆண்டில் ஓர் பெரிய பொக்கிஷம் கிடைக்கும் என்பது உண்மை. அந்நூல் நிலையத்தில் காணப்பட்ட ஒரு வாக்கியப் பலகை இது.

"அபிவிருத்தியின் அடி அத்திவாரமே ஒரு நூல் நிலையம் தான்"

ஒவ்வொரு வருடமும் June 4ம் திகதி ஒரு முறை எம்மையெல்லாம் மெய் சிலிர்க்க வைக் கின்றது.நினைவு கூருவோம் அந்நாளை 🕮

## போர் முனையில்........

ஏ!
அழுக்குச் சமூகமே
இரண்டு நிமிடம் எழுந்திரு!
மௌனம் கொண்டாடு!
ரத்தத்தை அழு! கண்ணீரில்
மூழ்கிப் போர்!
உனது
பிடிவாத பீடத்தின்
காணிக்கையாய்
இன்னும்
எத்தனை
இளந்தலைகள்

## ......இருந்து

**வினோத்**
**யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## உங்களிடம் இருந்து ..........

**ஆக்கங்கள்**

இச்சஞ்சிகையில் பிரசுரிப்பதற்கேற்ற ஆக்கபூர் வமான படைப்புக்களை எமக்கு அனுப்பி வையுங்கள்

**வாசகர் கடிதம்**

வாசகர்களிடம் இருந்து இச் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு தேவையான ஆலோசனைகள் சஞ்சிகை பற்றிய விமர்சன ங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கேள்வி பதில்**

**(சூரியன் பதில் தரும்)**

வாசகர்களிடம் இருந்து குறிப்பாக மாணவர்களிடம் இருந்து அறிவுத் தேடலின் போது எழும்சந்தேகங்களை எம்மிடம் கேள்விகளாகக் கேட்களாம் பதிலளிக்கப்படும் உங்கள் சந்கேகங்களை எழுதியனுப்புங்கள் சூரியன் பதில் தருவான் மற்றும் சினிமா, அரசியல் தவிர்ந்த கேள்விகளைக் கேட்கலாம்.

## அடுத்த இதழ் ............

**விளையாட்டு பற்றிய சிறப்பிதழாகும் இது தொடர்பான கட்டுரைகள் துணுக்குகள் போன்றவற்றை எமக்கு அனுப்பி வையுங்கள். பொதுவாக எமது சஞ்சிகையால் நடாத்தப்படும் கராத்தே சுற்றுப் போட்டி சம்பந்தமான பங்குபற்றும் குழுக்கள், வீரர்களின் விபரங்கள் அடங்கியதாக அமையும். ஆக்கங்கள் யாவும் உங்கள் சொந்த ஆக்கங்களாக இருத்தல் வேண்டும்.**

உவகையுடன் எதிர்பார்க்கின்றோம்

**பெயர் வதிவிடமுகவரி, மாணவராயின் பயிலும் பாடசாலை தரம் போன்றவற்றைக் குறிப்பிட்டு அனுப்பவும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வியக்க வைக்கும் விலங்கினங்கள்

## பாடும் மீன்கள்

அத்திலாந்திக், பசுபிக் பெருங்கடல்களில் பாடும் மீன்கள் உள்ளன. மீன்களோ, பறவைகளோ பாடும் என்று நாம் கூறும் போது மனிதரைப் போல பாடும் என்று நாம் எதிர்பார்க்கக கூடாது. மீன்கள் எழுப்பும் ஓசையோ பறவைகள் எழுப்பும் ஓசையோ ஓர் இசைநயத்துடன் கேட்கும்போது மீன்கள் பாடுகின்றன என நாம் கூறுவதுண்டு. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்வரை மீன்கள் வாய் பேசாத உயிரினங்கள் என்றுதான் கூறினார். ஊமைகள் என்றும் உயிரியல் வல்லுனர்கள் கூறினர்.

2ம் உலகப்போர் நடந்த காலத்தில் ஜேர்மனிய கடற்படையினர் யூ போர்ட் என்னும் கப்பல்களைக் கண்டுபிடிக்க அமெரிக்க கடற்படையின் கைதிறபோர்ட் என்னும் கருவிகளைக் கடலில் இறக்கியபோது மர்மமான ஒலிகள் கேட்டன. பின்னர்தான் அவை மீன்கள் எழுப்பும் ஒசையெனத தெரிய வந்தது. ஒசைநயத்துடன் ஒலி எழுப்பும் மீன்கள் மூன்று வகைப்படும்.

(i) டான்சல் மீன்

(ii) காட்மீன்

(iii) கெடாட் மீன்

என்பனவாகும். டான்சல்மீன் சுவர்சுகொள்ளி பூச்சிபோல சத்தத்தை எழுப்புகின்றது. பெண்மீன் இவ்வாறு பாடி ஆண் மீன்களைக் கவருகின்றது. கெடாட் மீன் மோட்டார் சைக்கிளின் ஒலியைப்போல் ஒத்திருக்கும். இது அந்த மீனின் காதல் பாட்டு ஆகும். காட் மீன் இது உலோக ஒலிபோல கேட்கும் இவவாறான மீன்கள் பாடு மீன்கள் எனப்படுகின்றது.

## கவிதை வித்தை ......................

*
என்
முகவரியில் கூட
முக்காடிட்டிருப்பது
உன் பற்றிய
சோகம் தான்

- எவ்.எக்ஸ். சுதடர்சன் -

*
உன்னை
பரிசுத்தரிரா விட்டால்
உலகில் மிகவும் மருதுவானது
தளிர் என்னே
தப்பாகச் சொலஷியிருப்பேன்.

- வி. கவிதா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரம் நடுகை வாரம்



ஒக்டோபர் 26ம் திகதி முதல் நவம்பர் 1ம் திகதி வரையான காலப்பகுதி யாழ் மாவட்டத்தில் மரம் நடுகை வாரமாக அனுஷ் டிக்கப்பட்டு வந்தது. இப் போது சில வருடங்களாக இது கடைப்பிடிக்கப்படுவது இல்லை. தமிழீழ பொருண்மிய மேன்பாட்டு நிறுவனத் தின் சூழல் பாதுகாப்புப் பகுதியினால் ஆரம்பிக்கப்பட்ட இன் நிகழ்வை நாமும் எமது வருங்காலச் சந்ததியினரையும், சூழலையும் கருத்தில் கொண்டு அனுஷ்டிப்போமாக

இதற்காக வித்து மாணவர் சஞ்சிகை பொது மக்களுக்கு இலவசமாக மரக் கன்றுகளை விநியோகிக்கவுள்ளது. மரக்கன்று களைப் பெற விரும்புவோர் முன் கூட்டியே தங்களது பெயர்களை வித்து மாணவர் சஞ்சிகை அலுவ லகத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். பொதுமக்களிடையே சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற் படுத்தக் கூடிய சித்திரங்கள், சுலோகங்கள் எழுச்சியூட்டும் வாசகங்களாகியவற்றை எமது அடுத்த இதழுக்காக எழுதி அனுப்புங்கள்.

**பட்ட மரத்தைத் தறித்தாலும் பத்து மரங்களை நட்டுவிடு**

# ENGLISH CORNER

## இங்கிலீஸ் கோர்னர்

இலகுவில் ஆங்கிலம் எழுதப், பேச, வாசிக்க இதோ உங்களுக்காக வித்து வழங்கும் இங்கிலிஸ் கோர்ணர்

## அடிப்படை ஆங்கிலம்
## Basic English
### பாடம் 2

மனனம் செய்ய வேண்டியவை

***Name of Vehicles***

1) Car 2) Boat 3) Ship
4) Bus 5) Bicycle
6) Three Wheeler 7) Van
8) Jeep 9) Lorry 10) Train
11) Aero Plane

***Name of Cities***

1) Colombo
2) Anuradhapura
3) Sigiriya
4) Dambulla
5) Kandy
6) Ratnapura
7) Galle
8) Hatton
9) Bandarawela
10) Kegalle
11) Nuwaraeliya
12) Matale
13) Jaffna

(To be Conti.......)

Teach By
Mrs.A.Ratnasingam
Trincomalee.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பொது அறிவுப் போட்டி

| |
|---|
| 1ம் பரிசு ரூ. 150 |
| 2ம் பரிசு ரூ. 100 |
| 3ம் பரிசு ரூ. 50 |

- நடுவர் தீர்ப்பே இறுதியானது.
- வித்துவின் பணியாளர்கள் இப்போட்டியில் பங்கு கொள்ள முடியாது.

**போட்டி இல.01 இல் பரிசுபெற்றோர்.**

1ம் பரிசு - ஆர்.துஸ்யந்தன் அச்செழு
2ம் பரிசு கே.வராகினி,துன்னாலை
3ம் பரிசு எஸ்.நிசாந்தி, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப்பெறுவோர்**

1. செல்வன் N.டக்லஸ், கிளிநொச்சி
2. T. ராஜேந்திரன், கரவெட்டி
3. S. பாபு, யாழ்ப்பாணம்

**பொதுஅறிவுப்போட்டி இல.02**

1) "கிவி" பறவை எந்த நாட்டில் உள்ளது?
2) நான்கு வித சுதந்திரங்கள் எவை?
3) மனித உடலில் அதிகமாக உள்ள மூலகம் எது?
4) காற்றில் பெருமளவு உள்ள வாயு எது?
5) நிலப்பரப்பே இல்லாத இடம் எது?
6) பரப்பளவில்பெரிய நாடுஎது?
7) பனிக்கண்டம் என அழைக்கப்படும் நாடு எது?
8) ஏவரெஸ்ரில் ஏறிய முதல் பெண்மணி யார்?
9) மழையை அளக்கும் கருவியின் பெயர் என்ன?
10) நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி யார்?

**பொதுஅறிவுப் போட்டி இல. 2**
பெயர் : ..........................................
முகவரி : ..........................................
தரம் : ..........................................

**உங்கள் விடையுடன் கூப்பன்களையும் ஒட்டி அனுப்பவும்.**

## ஆசிரியரிடம் இருந்து

966, பருத்தித்துறை வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்

அறிவைத் தேடும் அன்பு உள்ளங்களே.

"வித்து" இது இரண்டாவது இதழ் நாம் எதிர்பார்க்காதபடி வாசகர்களது பாராட்டுக்களால் புரிப்படைந்த மனத்துடன் இதழ் 2 இல் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

நீங்கள் ஒவ்வொருவரும் காண்பிக்கும் ஆர்வமும் ஆதரவும் தான் வித்துவை தொடர்ச்சியாக வெளியிடவைப்பதில் உந்து சக்தியாய் உள்ளது.

சஞ்சிகை வெளியீடு என்பது ஒரு சாதாரன செயற்பாடு அல்ல எத்தனையோ இன்னல்களின் மத்தியில்தான் ஒரு சஞ்சிகை வெளியிடப்படுகின்றது.

சஞ்சிகையின் நீண்ட ஆயுளுக்கு சந்தாதாரர்கள் அவசியமாகும். நீங்கள் ஒவ்வொரு வரும் சந்தாதாரர் களாக அல்லது இன்னுமொருவரை அறிமுகப் படுத்துவதன் மூலம் வித்து மேலும் வளம் பெறும் என எதிர்பார்க்கின்றோம். ஆவன செய்வீர்களா?

உங்க ஒவ்வொருவரிடம் இருந்தும் இம்மாத இறுதிக்குள் பதிற் கடிதங்களை எதிர்பார்க் கின்றோம்.

'நன்றி'

அன்புடன்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## முயன்று பாருங்களேன்


✍ 10 செவ்வந்திக் கன்று களை நான்குநான்காக 5 நேர்கோடுகளில் நாட்டுதல் வேண்டும். நாட்டுங்கள் பார்ப்போம்.

✍ 12 இஞ்சி நீளம் 12 இஞ்சி அகலம் ஒரு சதுர அடி ஆகும். ஆகவே 6 இஞ்சி நீளம் 6 இஞ்சி அகலம் எத்தனை சதுர அடி?

✍ ஒரு அப்பியாசப்புத்த கத்தின் விலை 10 ரூபா ஒரு பேனாவின் விலை 3 ரூபா ஒரு பென்சிலின் விலை 50 சதம் ஆகும். கந்தனிடம் ரூபா 100 கொடுத்த அவரது தந்தை 100 சாமான்கள் வாங்கவும் வேண்டும் ஆனால் பணம் மிகுதி வரக்கூடாதுஎன்றார். கந்தனுக்கு விடை கூறுங்கள் பார்போம்..

## மூளைக்கு வேலை

**(சென்ற இதழின் விடை)**



**உங்கள் விடைகளை எமக்கு எழுதி அனுப்பி பரிசில்களையும் பாரட்டுக்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.**

## சாதிகள்

### ஏனடா மனிதா..?

"ஒருவன் சாதியைப் பாராதே அவன் சாதித்ததைப்பார்."

சாதி என்பது ரொம்ப பழசு தூரப் போகின்ற அளவுக்குப் பழசு சாதி என்பது பழைய சட்டை அதை தாத்தா அப்பா போட்டிருந்தார்கள் எனச் சொல்லிக் கொள்ளலாமே தவிர நாமும் போட்டுக் கொண்டு அலையக் கூடாது.

பாம்பு கடித்து செத்தவர் களைவிட சாதியால் அடிபட்டுச் செத்தவர்களே அதிகம்பேர்

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"

என்று திருமூலர் தொடங்கி "சாதிகள்இல்லையடி பாப்பா"

என்று பாரதியர் வரை உபதேசம் பண்ணியும் நம் காதுகளில் ஏறவில்லை.

மத உணர்வை விட சாதிஉணர்வே வலுவானதாக உள்ளது.

செருப்பை மாற்றிக் கொள்ளலாம் பாதத்தை மாற்றிக்கொள்ள முடியுமா?

மோதிரத்தை மாற்றிக் கொள்ளலாம் விரலை மாற்றிக் கொள்ளலாமா?

இன்றொரு மதம் நாளை ஒரு மதம். ஆனால் சாதி விரல் போல் நம்மோடே கடைசிவரை இருக்கும் கண்ணபிரானை இடைச்சாதி என்கிறார்கள் உயர் சாதிக்கும் தாழ் சாதிக்கும் இடைப்பட்டவன் அவன். தமிழர் கடவுள் முருகனிடம் இந்த சாதியின் ஜம்பம் பலிக்கவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சொல்லப்பட்ட தெய்வானை யையும் தாழ்ந்த சாதியென சொல்லப்பட்ட குறவள்ளி யையும் திருமணம் செய்து கொண்டான். உயர்ந்த சாதிகாரி இவனைத் தேடி வந்தாள் தாழ்த்தப்பட்ட சாதிக்காரியை இவன் தேடிப்போனான். ஒரு மனைவி விண்ணில் மற்றொரு மனைவி மண்ணில் விண்ணையும் மண்ணையும் இணைத்தவன் முருகன். முருகன் உயர்ந்த சாதியையும் தாழ்ந்த சாதியையும் இணைக்கின்றான். தெய்வம் இணைக்கிறான் மனிதன் பிரிக்கின்றான்.

சிவபெருமானுக்கு இந்த சாதி சங்கதி எல்லாம் பிடிக்காது அவருடைய நாயன்மார்களில்

- திருநாளைப் போவார்-பறையர்
- திருகுறிப்புத்தொண்டர்-வண்ணார்
- திருநீலகண்டர் - குயவர்
- ஞானதி நாயனார் - நாடார்
- சம்மந்தர் - பிராமணர்
- நாவுக்காரசர் - வேளாளர்
- கண்ணப்ப நாயனார்-வேடுவர்
- சேரன்பெருமான்நாயனார்-சத்திரியர்
- முனை அடுவார் நாயனார் - மறவர்
- அதிபத்த நாயனார் - பரதவர்
- காரைக்கால் அம்மையார்-செட்டியார்

அத்தனைபேரையும் அரவணைத்து கொள்பவரே ஈஸ்வரர்.

மகா விஷ்ணுவின் ஆழ்வார்களில்

- மறணேரி நம்பி - பள்ளர்
- பெரிய நம்பி - ஐயங்கலர் இவ்வாறு மனிதன் சாதிகளைப் பிரிப்பது இறைவனுக்கு சீற்றத்தை உண்டுபண்ணும் செயலாகும்.

தொழிலை வைத்து சாதி தொடங்கியது என்பார்கள் அன்று 5-6 தொழில்களே இருந்தன

- உணவு உற்பத்திக்கு - சூத்திரர்
- பொருட்களை விற்பவர் - வணிகர்
- பொருட்களைக் காப்பவர் - சத்திரியர்
- பிராத்தனை செய்பவர் - பிராமர்ணர்

அதோடு சாதி முடிந்தது. ஆனால் இன்று ஒரு சாரதி ஒரு பொலிஸ் காரனால் தாக்கப்பட்டால் நகரத்தில் பொலில்காரர், சாரதிகள் மோதல், வேலைநிறுத்தம். டிரைவர் பொலிஸ்கார் ஆகலாம். பொலிஸ்காரர் டிரைவர் ஆகலாம். ஆனால் மாறாமல் இருந்த சாதிகள் மாறும் தலையணைபோல் மாறுகின்றன.

## மாஸ்ரர்

மாம்பழத்தில்சாதிகள் உண்டு வெள்ளைக் கொழும்பு, கறுத்தக் கொழும்பு என இவை சாதிப் பிரிவுகளின் மூலம் ஆரோக்கியம் அடைகின்றன.ஆடுகளில்வெள்ளாடு, செம்மறியாடு என உண்டு. இவை எம்மைச்சஞ்சலத்துக்கு ஆளாக்குவதில்லை. ரோஜாக்களில் பல சாதிகள் உண்டு. இதனால் உலகம் அழகு பெறுகிறது. மீன்களில் பல சாதிகள் உண்டு. இதனால் உணவில் சுவை கூடுகின்றது. ஆனால் மனிதரில் சாதிகள் பெருகும் போது பல துன்பங்கள் உண்டாகின்றது. எனவே இலாபமில்லா மனித சாதிபபிரிவை ஒழிப்போம். விலங்குகளில் தாவரங்களில் சாதிப் பிரிவை வளர்ப்போம்.

**“வீரிய ‘வித்து’ கள் பரவட்டும்”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அபயக் குரல் எழுப்பும்

## எவரெஸ்ட்

## ☆ மலைச் சிகரம் ☆

உலகின் மிக உயர்ந்த மலைச் சிகரம் எவரெஸ்ட் சிகரம் தான். சீனாவின் திபெத்திற்கும் நேபாளத்திற்குமிடையே எல்லையில் அமைந்திருக்-கிறது. இந்தச் சிகரம் 8246 அடி உயரம் கொண்டது. மலை ஏறுவதை ஊக்குவித்த பிரிட்டிஷ் இராணுவத் தளபதி ஜோர்ஜ் எவரெஸ்டின் பெயரால் இது அழைக்கப்படுகின்றது.

சோகமான செய்தி என்னவெனில் இந்தச் சிகரத்தின் உயரம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்து வருவதாக மலை ஆராய்ச்சியாளர்கள்கூறுகின்றனர். எவரெஸ்ட் மலைச் சிகரத்தின் உயரம் வருடத்திற்கு 2 மீற்றர் குறைந்து வருவதாக கணக்கிடப்படுகின்றது.

நிலநடுக்கம், பூமியதிர்ச்சி போன்ற காரணங்களினால் எவரெஸ்ட்சிகரத்தின் உயரம் குறைந்து வருவது அறியப்பட்டுள்ளது.ஏனைய மலைச் சிகரங்களும் இவ்வாறு குறைகின்றதும் அறிய முடிகின்றது.

இயற்கையின் சீற்றத்தால் இயற்கையே அழியும் நிலையில் மனிதன் எம்மாத்திரம் அபயக்குரல் எழுப்பித்தான் என்னபயன் தடுக்கத்தான் முடியுமா?

🕮

## யாழ். மாவட்ட ரீதியிலான மாபெரும் கராத்தே சுற்றுப்போட்டி- 2002

மாணவர்களின் திறமைகளை வெளிக் கொண்டு வரும் நோக்குடன் மாணவர்களுக்கும் வித்து வாசகர்களுக்கும் சஞ்சிகை நிறுவனமானது பல்வேறு வகையான நிகழ்வுகளையும், போட்டிகளையும் நடாத்திவருகின்றது. அந்தவகையில் ஓர் சிறப்பு அமர்வாக யாழ். மாவட்ட ரீதியிலான கராத்தே சுற்றுப்போட்டி ஒன்றினை ஒக்டோபர் 05, 06, 07ம் திகதிகளில் நடாத்தப்பட உள்ளது. இப் போட்டிக்கான அனுமதிகள் வித்து மாணவர் சஞ்சிகையால் வழங்கப்படும் இப் போட்டிக்கு Japan Karatedo Itosu -Kai Sri Lanka நிறுவனம் ஆதரவு வழங்குவதுடன் யாழ். மாவட்ட கராத்தே சங்கம் ஒத்துழைப்பு வழங்குகின்றது.

இப்போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்கள் யாவருக்கும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற மத்தியஸ்தர்களால் சான்றிதழ் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றும் 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெறும் வீரர்களுக்கு பதக்கங்களும் வழங்கப்படும்.

**சிந்தனை வித்து**
(அட்டைப்பட விளக்கம்)
அட்டைப்படம் சம்பந்தமாக உங்கள் உள்ளத்தில் தோன்றுவனவற்றைக் கவிதைகளாக அல்லது 25 சொற்களுக்குள் எழுதியனுப்புங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்போட்டிக்கான மத்தியஸ்தர்கள் கொழும்பில் இருந்து வரவழைக்கப்படுகின்றனர். இவர்கள் போட்டிக்கு ஒரு வாரம் முன்னதாகவே யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து போட்டியாளர்களுக்கான விசேட கருத்தரங்குஒன்றினையும், பயிற்சிகளையும் வழங்க உள்ளனர். எனவே யாழ் மாவட்டத்தில் காரத்தே மாணவர்கள் யாவரும் இப்போட்டியில் பங்கு கொண்டுசான்றிதழ்களைப் பெறுவதன் மூலம் யாழ் மாவட்ட தரம் வாய்ந்த வீரர்களாக நீங்கள் தேர்வு செய்யப்படுவீர்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆரம்பப் பட்டியில் இருந்து இறுதிப் பட்டி வரையான போட்டியாளர்கள் இப் போட்டியில் கலந்து கொள்ளலாம் என்று நிர்வாக ஆசிரியர் கூறினார்.

**விளையாட்டுத்துறை,**
**வித்துமாணவர்**
**சஞ்சிகை**

**யாழ் மாவட்ட கராத்தே வீரர்களின் துணிச்சலை நேரில் காணுங்கள் ஒக்டோபர் 5,6.7ம் திகதிகளில் யாழ் நகரில் கல்லூரியில் அனுமதி ஓர் வித்து சஞ்சிகையே**


**மாபெரும் பளுத்தூக்கும் போட்டி2002**

**இப்போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை வித்து மாணவர் சஞ்சிகை அலுவலகத்தில் 25.09.2002 க்கு முன் பெற்றுக்கொள்ளவும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# "வித்து" உங்களை அழைக்கிறது




## பயன்பெற விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

**இல. 966, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

---

## சந்திர மண்டல

## இரவு

நாம் ஒரு பகலும் ஒரு இரவும் வந்தால் ஒரு நாள் என்கின்றோம். இவ்வாறான ஒரு நாள் சந்திரனில் தோன்ற 30 நாட்களாகும். ஏனெனில் அங்கு 15 நாள் இரவும் 15 நாள் பகலும் தொடர்ச்சியாக இருக்கும்.

## ஒலியும் கேட்டலும்

ஒலி பொருட்களின் அதிர்வினால் உண்டாகி காற்றின் மூலம் பரவுகின்றது. அதிர்வுகள் காற்றை அதிரும் படி செய்து ஒலி அலைகளை உண்டுபண்ணும். ஒலியின் வேகம் மணிக்கு 1216km ஆகும். காற்று உள்ள இடத்தில் தான் ஒலி கேட்கும். சந்திரனில் ஒலி கேட்காது. ஏனெனில் அங்கு காற்று இல்லை. ஒலி ஒளியை விட வேகம் குறைவு. அதனால்தான் இடியும் மின்னலும் ஒரே சமயத்தில் தோன்றினாலும் மின்னல் முதலில் தெரிகிறது. இடியின் ஓசை பின்னால் கேட்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## விஞ்ஞானம்

01. கண்ணாடியைக்கரைக்கும் அமிலம் எது?
**ஹைட்ரோ புளூரிக்அமிலம்**

02. மணக்கும் உப்பில் உள்ள இரசாயனப் பதார்த்தம் எது?
**அமோனியம் காபனேற்று**

03. மின்குமிழ்களில் பயன்படுத்தப்படும் வாயுக்கள் எவை?
**ஆகன், நியோன்**

04. இரும்புச் சத்து உள்ள இலைவகை எது ?
**முருங்கை**

05. திண்மமும் இல்லாத திரவமும் இல்லாத பதார்த்தம் எது?
**பாதரசம்**

06. மிகச்சிறிய உயிரினம் எது?
**நெக்ரோசிஸ் வைரஸ்**

07. கோப்பியில் உள்ள நச்சுப்பொருள் எது ?
**கபின்**

08. முள்ளந்தண்டு என்புகள் எத்தனை ?
**33**

09. குருதிச் சுற்றோட்டத்தைக் கண்டுபிடித்தவர் யார் ?
**வில்லியம் ஹாவே**

10. விமானங்களுக்கு பயன்படும் கலப்பு உலோகங்கள் எவை ?
**அலுமினியம், மக்னீசியம், செப்பு, மங்கனீசு**

**- நா. மயூகரன் -**
**தரம் - 9,**
**யாழ். மத்திய கல்லூரி.**

**05.10.2002.**

- **ஒவ்வொரு மாதமும் 5ம் திகதி வித்து உங்கள் கைகளில் முளைக்கும்.**
- **வித்து உங்கள் ஒவ்வொருவரையும் நேரில் சந்திக்க உள்ளது.**
  **ஆச்சரியமாக இருக்கிறதா? விரும்பின் இம்மாத இறுதிக்குள் எமக்கு கடிதம் அனுப்பவும்.**
- **நாள் ஒன்றுக்கு சதம் 50 ஒதுக்குங்கள் வித்துவுக்காக**
- **அறிவுப் பசியைத் தீர்க்க வித்து என்றும் உங்களுக்கு உதவும்.**
- **வித்துவை தபாலில் பெற விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.**
- **வித்து பாலர் முதல் பல்கலைக்கழக மாணவர் வரை படித்து பயன்பெறக்-கூடிய ஓர் அரிய பொக்கிசம்.**

**நிர்வாக**
**உத்தியோகத்தர்,**
**வித்து மாணவர்**
**சஞ்சிகை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கண்டுபிடிப்பு போட்டி

(01).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | மை |
| | | | | | மை |
| | | | | | மை |
| | | | | | மை |
| | | | | | மை |
| | | | | | மை |

''மை'' என்ற எழுத்து இறுதியாக வரும் சொற்களைக் கண்டுபிடித்து வெற்றுப் பெட்டிகளைப் பூரணப்படுத்தி இப்படத்தைப் பிரதி செய்து எமக்கு அனுப்பி வையுங்கள். பாராட்டும், பரிசில்களும் காத்திருக்கின்றன.

### விஞ்ஞானம் தந்த விஞ்ஞானிகள்

1. மருத்துவத்தின் தந்தை - கிப்போகிரட்டிஸ்
2. போலியோ வக்சினைக் கண்டறிந்தவர்-அல்பேட் சேவின்
3. உளமருத்துவத்தின் தந்தை - சிக்மன் ∴புறொய்ட்
4. உலகில் முதல் சோதனை குழாய் குழந்தை - லூாஸி பிரவுண் (பெண்)
5. இருதய மாற்றும் சிகிச்சையை முதல் முதலில் வெற்றிகரமாகச் செய்தவர் – Dr.கிறிஸ்ரியன் பேனாட்
6. பென்சிலின் மருந்தைக் கண்டறிந்தவர்- அலெக்ஸாண்டர் பிளேமிங்
7. ஹோமியோபதி மருத்துவமுறையின் தந்தை - சாமூவேல் ஹனிமன்
8. ஆயுர்வேத மருத்துவமுறையின் தந்தை - சாரகா

## சிரிக்கலாம் வாருங்கள்

- கால் இல்லா டேபிள் (Table) எது? டைம் டேபிள்தான்
- **அப்பா** : சிறட்டைக் கரி வாங்கச் சொன்னால் ஏன்டா பட்டாசு வாங்கினே ?

  **மகன்** : நீங்கள் தானேப்பா காசைச் கரியாக்க கூடாது என்று சொன்னீங்களே.
- **ஒருவர்** : எங்கப்பா கோடீஸ்வரன்.

  **மற்றவர்** : அப்ப ஏன்டா கிழிஞ்ச சட்டை போட்டிருக்கே

  **ஒருவர்** : எங்கப்பா பேர் தான் கோடீஸ்வரன்.

### சொற்சிலம்பம் – (01)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ |
| 3 | | | | 4 | 5 |
| | ■ | | ■ | | |
| 7 | | | | 8 | ■ |
| | ■ | 9 | ■ | 10 | |
| 11 | | | | 12 | |

**இடமிருந்து வலம்**

1. தரைவிரிப்பு
2. குழந்தைகளின் ஆரம்பப் பாடம்
3. இலங்கையை ஆண்ட அந்நிய நாட்டவர்.
4. பரிநாமத்தின் தந்தை
5. சுவைகளில் ஒன்று தலைகீழாக உள்ளது

**மேலிருந்து கீழ்**

1. நிறம் மாறும் விலங்கு.
3. அடுத்த ஒலிம்பிக் போட்டி நடைபெறும் இடம்
7. நாட்டிய் நாடகம்.

**விடைகளை அனுப்பி பரிசில்களை பெறுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யாழ் மண்ணில் சிறந்த இளங்கலைஞர்களின்
ஒன்றிணைப்பில் மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருக்கும்

# ஐங்கரன்

## இசைக் குழுவின்

# வசந்த ராகங்கள்

என்றென்றும் யாழ் மண்ணில் மங்கா புகழ்பெற்ற
ஐங்கரனின் வசந்த ராகங்கள் இசை நிகழ்ச்சியை
பதிவு செய்யநாடுங்கள்

உரிமையாளர் P. வீஸ்மீன்,
இல. 74, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

## "வித்து" மாணவர் சஞ்சிகை

விற்பனை முகவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


மாணவர்கள் உங்கள், பாடசாலைகளிலும் கல்வி- நிலையங்களிலும், சகல புத்தகக் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்,

**இல. 966, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மழலை "வித்து"

## பேசும் படம்



சிறுவர் சிறுமியரே மேலே உள்ள படத்தைப் பார்த்து கதையை எழுதியனுப்பி பரிசில்களைப் பெற்றுக் கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD

CES

கணனி ஆர்வலர்களிற்கு ஓர் நற்செய்தி

உங்களின் கணனியை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான எமது சேவை உங்கள் எதிர்பார்ப்பு

- அரசாங்க உத்தியோகத்தர்கள் O/L, A/L மாணவர்களிற்கு கம்பியூட்டர் பற்றிய முன் அனுபவம் இல்லாதவர்களிற்கும் பிரத்தியேக வகுப்புக்கள்.
- சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள்.
- கணனி உதிரிப்பாகங்கள் விற்பனைப்பிரிவுகள் புதியவை விற்பனைக்குண்டு.
- வெளிநாட்டு உயர்கல்விக்கான இணைப்பு பாடநெறி. இது வெளிநாட்டில் உயர்கல்வி எனும் உங்கள் கனவை நனவாக்கும் மிகச் சிறந்த பாடநெறி.

மாணவர்கள் உத்தியோகத்தர்களிற்கு தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தப்படும்

மாணவர்கள் உத்தியோகத்தர்களிற்கு தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தப்படும்

சிறந்த சேவை !
நிறைந்த திருப்தி !
குறைந்த கட்டணம் !!!

தொடர்பு:
தொலைபேசி இல : 021-2222692
021- 2222044

இல 223, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்
(யாழ் இந்துஆரம்ப பாடசாலை முன்பாக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media